## (3) அவையுரிமைக் கேள்வி

### நாத்திகம் நாளிதழில் பேரவைத் தலைவரின் தீர்ப்பைப் பற்றி விமர்சித்து வந்துள்ள செய்தி

**MR. DEPUTY SPEAKER :** Hon. Memeber Thiru N. Veeraswamy has given notice of the following Privilege Matter :—

" Under Rule 184 of the Assembly Rules, I seek your permission to raise a matter of privilege against the Editor and Publisher of the Tamil Daily 'NATHIGAM', dated the 9th April, 1970 in respect of the matter mentioned below :

In the 'Nathigam', dated 9th April 1970 on page 1 of the paper, they have published the report of the proceedings of the House in respect of the ruling of the Hon. Speaker on the allegation made by Thiruu R. Ramachandra Dorai against the Hon. Minister for Local Administration and the further proceedings thereon, with the Caption . . .

**சென்னை சட்ட மன்றத்தில்**

ராமச்சந்திரதுரை சாட்டிய குற்றச்சாட்டுகள் பொய்யா ?

and among other things, the paper has also published as follows :

"அவருக்கு கிடைத்த தீர்ப்பு அரசுக்குக் கிடைத்த அவமானமே ஆகும்.

I submit that this is a reflection on the ruling of the Hon. Speaker. The tone and tenor of the report insinuates partiality to the Speaker in the ruling given by him and is also a distorted, perverted publication of the proceedings of the House with a view to bring the House into contempt in the eyes of the public.

Hence a *prima facie* case of breach of privilege arises and I seek your permission to raise this."

என்று ஒரு உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பற்றிப் பரிசீலித்து இன்னொரு நாள் தீர்ப்பு அளிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி நான் விளக்கம் சொல்ல வேண்டாமா?

**திரு. கே. விநாயகம் :** விளக்கம் தர அவருக்கு அனுமதி அளிப்பதா யிருந்தால் எங்களுக்கும் விளக்கம் தர அனுமதி அளிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவரிடம் விளக்கம் கேட்க வில்லை. இதைப்பற்றிப் பரிசீலித்து இன்னொரு நாள் தீர்ப்பு அளிக்கப் படும் என்று தெரிவித்திருக்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** அது, பத்திரிகையாளர்களுடைய "காமெண்ட்" ஆக இருக்கலாம். ப்ரொஸீடிங்ஸைப் போடுவதுதான் தப்பு. சபா நாயகர் தீர்ப்புக்கு அல்ல. காமெண்டரி எழுதுவதில் தப்பு இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தப்பா, இல்லையா என்பதை, மறுபடியும் விவாதத்திற்கு வரும்போது விளக்கலாம். சபாநாயகர் தீர்ப்பே அரசாங்கத்திற்கு ஏற்பட்ட அவமானம் என்று பத்திரிகையில் வந்திருப்பதாகக் குறிப்பிடுகிறார். நானும் அந்தப் பத்திரிகையைப் பார்க்க வில்லை. அவருக்கு அளித்த தீர்ப்பு சபாநாயகர் அளித்த தீர்ப்புதான்.